கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 01.09.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஒரு நாள் கருத்தரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து "தொழில்துறைகள் வேட்கையாளர்களிடமிருந்து எதிர்பார்க்கும் திறன்கள் மற்றும் அவற்றை பூர்த்தி செய்யும் முறைகள் பற்றிய" ஒரு நாள் கருத்தரங்கம் 30.8.2025 இன்று நடத்தியது. 150–க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிர் தகவலியல் மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கிடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழி வகுக்கும். பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிரி தொழில்நுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்தல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவுகிறது.

கோயம்புத்தூரில் உள்ள மாலிகுலர் கனெக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாகம் மற்றும் வசதிகள் துறையின் உதவி குழுத் தலைவர் திருமதி சௌபர்ணிகா லோகநாதன் மாணவர்களுக்கு ஒரு நுண்ணறிவுமிக்க சொற்பொழிவை நிகழ்த்தினார். தொழில்துறை முன்னேறுவதற்கு தேவையான திறன்கள் குறித்து கருத்துக்களைப் பகிர்ந்துரைத்தார். தொழில்நுட்ப திறன்களோடு சேர்ந்து குழு திறன், நேர்மறை சிந்தனை போன்ற மென்மையான திறன்களும் (soft skills) தொழில்முறை சூழல்களில் ஒத்துழைப்பு, தொழில்முறை வெற்றிக்கு அவசியம் என அவர் வலியுறுத்தினார்.

மாணவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், சுய கற்றல், தகவல் தொடர்பு திறன்களில் தேர்ச்சி பெறுதல், பாட அறிவை மேம்படுத்துதல் மற்றும் தொடர்ந்து பயிற்சி செய்வதில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார். தொழில்துறை தேவைகளுடன் ஒத்துப்போவது பற்றி வினாவித்த போது, "நிறுவனங்களை ஆராய்ச்சி மேற்கொள்ளுதல், நவீன சந்தை போக்குகளைப் புரிந்து கொள்ளுதல், மேலும் தங்கள் திறன்களை தொழில்துறை எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றபடி பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். தொழில் வெற்றிக்கு மிக முக்கியமானதாக இருக்கும் நிறுவன கலாச்சாரங்களுக்கு ஏற்ப மாறுவது, தொடர் கற்றலில் ஈடுபடுவது மற்றும் உயர் வேலைக்கு ஏற்றவாறு ஆராய்ந்து விண்ணப்பங்களில் கவனம் செலுத்துவது போன்றவை நீண்டகால வெற்றிக்குத் தேவையானவை எனவும் குறிப்பிட்டார்.

முன்னதாக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர மூலக்கூறு மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் மைய இயக்குனர் முனைவர். ந. செந்தில் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இறுதியாக, தாவர மூலக்கூறு மற்றும் உயிர் தகவலியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். லோ. அருள் அவர்கள் நன்றியுரையாற்றினார். தாவர உயரி தொழில்நுட்பவியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர்.கே. ஹேமபிரபா மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர்.வே. ராஜன்பாபு ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**